Registered No. M. 2330

"SIDDHANTHAM"
Vol. 38—No. 5

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 38 | விசுவாவசு வைகாசி 1965 மே | இதழ் 5

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர் : மு. அருணைசலம், எம். ஏ.,
துணைப் பத்திராசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

சமாஜச் செய்திகள்

30-5-65 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிறார்கள்.

நம் சமாஜச் சார்பில் 11-4-65 அன்று திரு. வி. க. மணிமண்டபத்தில் சைவசித்தாந்தத் தத்துவத்தைப்பற்றிய ஆங்கிலக் கருத்தரங்கு ஒன்று நிகழ்ந்தது. டோக்கியோ பல்கலைக்கழக வடமொழிப் பேராசிரியர் திரு. M. ஹரா அவர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது மாநிலக் கல்லூரிவடமொழிப்பேராசிரியர் திரு P. திருஞானசம்பந்தம் பிள்ளையவர்கள் M. A, L. T. தலைமை தாங்கி திரு. ஹரா அவர்களை அறிமுகப்படுத்தினார். சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர். V. A. தேவசேனபதி அவர்களும் நல். முருகேசமுதலியார் அவர்களும் நம் சமயக்கருத்துக்களை ஆங்கிலத்தில் விளக்கினார்கள். சமாஜத் தலைவர் திரு. கோ. முத்துசாமிபிள்ளையவர்கள் வரவேற்புரை, செயலாளர் கொ. நீ. சிங்காரவேல் முதலியார் அவர்கள் நன்றியுரைகளுடன் கூட்டம் இனிது முடிந்தது.

நம் சமாஜத்தின் சார்பில் திருநாவுக்கரசர் விழா 26-4-65 அன்று திருவான்மியூர் மருந்தீச்சுரர் ஆலயத்தில் நிகழ்ந்தது. திரு. கே. சிதம்பரம் B. SC. (அரசாங்கத் துணைச்செயலர்) அவர்கள் தலைமையில் அம்பை இரா. சங்கரனார் திருநாவுக்கரசர் பற்றி விரிவுரையாற்றினார்.

வைகாசி மாத விசேட தினங்கள்

5	(18-5-65)	திருஞானசம்பந்த நாயனார் விழா
,,		முருகநாயனார் விழா
,,		திருநீலநக்க நாயனார் விழா
,,		திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்விழா
15	(28-5-65)	கழற்சிங்கநாயனார் விழா
21	(3-6-65)	நமிநந்தியடிகள் நாயனார் விழா
,,	,,	சேக்கிழார் விழா
22	(4-6-65)	சோமாசி மாறநாயனார் விழா
29	(11-6-65)	திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் விழா

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 38 | விசுவாவசு வைகாசி 1965 மே | இதழ் 5

சித்தாந்த சாத்திர முதல்பதிப்பு

(ஆசிரியர்)

சித்தாந்த சாத்திரங்கள் இதுவரை பல பதிப்புக்கள் வெளி வந்துள்ளன. கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் வெளியிட்ட சாத்திர உரைப் பதிப்புத் தான் பலரும் அறிந்த பழைய பதிப்பு. பகுதி பகுதியாக 1871, 72, 75 முதலான பல ஆண்டுகளில் முதல் பதிப்பும், பின்னர் 1876-ல் இரண்டாம் பதிப்பும் வெளிவந்தன. 1897-ல் வண்ணக் களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முதலியாருடைய உரைப் பதிப்பு வெளி வந்தது. அடுத்து வந்தது பூவை கலியாண சுந்தர முதலியாருடைய உரைப்பதிப்பு. 1898-ல் ஆனூர் சிங்காரவேல் முதலியாருடைய பார்வையில் கல்குளம் கி.குப்புசாமி முதலியார் ஒருமூலப் பதிப்புவெளியிட்டார். அடுத்து வந்தவை, சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் வெளியீடுகள். 1936-ல் திரு ச. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் பார்வையில் முதல் உரைப் பதிப்பும், 1940-ல் எனது பார்வையில் இரண்டாவது உரைப் பதிப்பும் வெளி வந்தன. பின்னர் தருமபுர ஆதீனத்தில் சித்தாந்த சாத்திரமூலம் மட்டும் இரு பதிப்புக்கள் வெளியாயின. முதல் பதிப்பு 1942-ல் என் பார்வையிலும் இரண்டாம் பதிப்பு 1956-ல் திரு. முத்து

சு.மாணிக்கவாசகமுதலியார் பார்வையிலும்வெளி வந்தன. 1950-இன் பின் திருவாவடுதுறையாதினத்தார் சித்தாந்த சாத்திரங்கள் ஒவ்வொன்ருக உரையோடு பலமுறை அச்சிட்டிருக்கிருர்கள்.

ஆனுல் இவையனைத்துக்கும் முந்திய பதிப்பு ஒன்று உண்டு. திரிசிரபுரம் வித்துவான் மதுரை நாயகம்பிள்ளை என்பவர் அட்சய வருஷம் ஐப்பசி மாதம் (1866 அக்டோபர்) முதன்முதலாக இச்சாத்திரங்களை அச்சிடத் தொடங்கினுர். சாத்திரங்கள் சென்னை லேசியம் பிரசிலும் வ. புஷ்பரதச் செட்டியாரது .கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திலும் அச்சிடப்பட்டன. அளவு டெம்மி 1/16.

"உ சிவமயம். திருச்சிற்றம்பலம். திருவெண்ணை நல்லூரைத் திருப்பதியாகவெழுந்தருளிய பொல்லாப் பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய சிவஞான போதச் சூரணைக் கொத்தும் மெய் கண்ட சிவாசாரியர் திருவாய் மலர்ந்தருளிய சிவஞான போத மூலமும்.

இவை சாக்கிர் ஆரணி ம-ா-ா-ஸ்ரீ காசி—நாராயண சாமி முதலியார் அவர்களும் ஷை. ஊர் ம-ா-ா-ஸ்ரீ சந்நியாசி குப்பு செட்டியாரவர்களும் பலகால் வேண்டிக் கொண்டபடி திரிசிரபுரம் வித்துவான் மதுரை நாயகம் பிள்ளையவர்களால் பிழையறப் பரிசோதித்து சென்னைப் பட்டினம் லேசியம் பிரசில் அச்சிடப்பட்டன. அட்சயஹு ஐப்பசி மாதம் Registered copy right"

என்பது முதல் புத்தகத்தின் தலைப்பேடு. நூல்கள் ஒவ்வொன்ருக 1866—'67–ல் அச்சிடப்பட்டன. இப்பதிப்பாசிரியர், அச்சிடத் தூண்டியவரைப் பற்றியும் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இச்சைவ சித்தாந்த சாத்திரங்களை அச்சிடுவதற்கு உபகாரஞ்செய்த நமது இஷ்டர் பலருள் முக்கியராகிய ம-ா-ா-ஸ்ரீ ஆரணி சந்நியாசி குப்புச் செட்டியாரவர்கள் அறிவொழுக்கங்களிற் சிறந்தவராய் எச்சமயங்களினுஞ் சிறந்த நமது சற் சமயமாகிய சைவ சமயப் பயிர் புறச்

சமயக்களைகளான் மூடப்பட்டிருப்பதையுணர்ந்து அக்களைகளை வேரோடகழ்த்தெறியத் தம்மாற் கூடிய விடா முயற்சி செய்ய வேண்டுமென்றெண்ணங்கொண்டிருப்பதனுல் அவரை நாம் புகழ்வதுபோலப்புகழாதவர் உலகத்தில் யாவர்''

இப்பதிப்பு முழுமையும் சிறிய பைகா எழுத்தில். ஆனுல் அச்சு இன்னும் நூறு ஆண்டுகள் ஆகியும் கூட, மிகத் தெளிவாய் உள்ளது. இவர் சில ஏடுகளேனும் வைத்துப் பரிசோதித்து வெளியிட்டு இருக்கிருரென்று தெரிகிறது. நூல்கள் முழுமையும் மிகவும் திருத்தமாய்ப் பிழையில்லாத சரியான பாடங்களைக் கொண்டவையாய் உள்ளன.

சைவ சித்தாந்த சாத்திரம் பதினுன்கினையும் உணர்த்தும் செய்யுள் என்று இவர் "உந்தி களிறு" என்ற வெண்பாவை அச்சிட்டுள்ளார். இவ்வெண்பா ஏடுகளில் காணப்பட்டிலது. இப்பதிப்பு ஆசிரியரே எழுதினுரோ என்று கருதுவதற்கிடமாய் உள்ளது.

டாக்டர் சாமிநாதையரவர்கள் தமதுமீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் முதல் பாகத்தில், பிள்ளையவர்கள் காலத்திலிருந்த வித்துவான்களைக் குறிப்பிடும் போது, மதுரை நாயகம் பிள்ளை பற்றிப் பின்வருமாறு கூறுகிருர். "மருத (மதுரை) நாயகம் பிள்ளை; இவர் இலக்கண இலக்கியங்களிலும் மெய்கண்ட சாத்திரத்திலும் நல்ல பயிற்சியுடையவர். முதன்முதலாக மெய்கண்ட சாத்திரங்களைப் பதிப்பித்தவர் இவரே.''

இம்மதுரை நாயகம் பிள்ளை 1845-ல் பிறந்தார் என்று சொல்வர்: அப்படியானுல் தமது 21-ஆம் வயதில் இவர் சித்தாந்த சாஸ்திரம் அச்சிட்டிருக்க வேண்டும். இது பொருந்துவதானுல் அவருடைய புலமையும், சாஸ்திர அறிவும் மிக்க சிறப்புடையவை. இவர் நாகையில் அரசியல் அலுவலில் ஈடுபட்டிருந்தார். பிற சமயத்தார் சைவ சமயத்தை இழித்துக் கூறியதைக் கண்டு வருந்தி, அங்கு சைவப் பிரசாரத்திற்காக சைவ சித்தாந்த சபை ஏற்படுத்

தினர். சோமசுந்தர நாயகர் அவர்களைச் சென்னையி லிருந்து அழைத்து வந்து சைவம் வளரவும் பிற சமயங்கள் அடங்கவும் வழி செய்தார். இவர் தொடர்பினாலேயே பிற் காலத்தில் மறைமலை அடிகளாகிய வேதாசலம் பிள்ளை சோமசுந்தர நாயகரையடுத்துச் சைவ சித்தாந்தப் புலமை பெற்றார். தமது 75-ஆம் வயதில் இவர் உறையூரில் கால மானார். இவர் காலமானபோது சுவாமி வேதாசலம் மனம் வருந்திப் பல பாக்கள் பாடினார்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 60-ஆம் ஆண்டு விழா கொண்டாடத் திட்டமிடுகின்ற இந்தச் சந்தர்ப்பத் தில், முதன்முதலாக சித்தாந்த சாத்திரம் அச்சிட்ட இப் பெரியாரையும் நாம் நினைவு கூர்தல் பொருத்தமாகும். இந்த 60-ஆம் ஆண்டே, முதல் சித்தாந்த சாஸ்திரம் அச் சாகிய 100-வது ஆண்டுமாகிறது. ஆகவே முதல் சித் தாந்த சாஸ்திரம் அச்சிட்ட 100-ஆம் ஆண்டு விழா இப் போது கொண்டாடுவதும் பொருத்தமாகும்.

<u>தலப்பகுதி</u>

பெருமங்கலம்

(மு. அருணாசலம்)

ஏயர்கோன் கலிக்காம நாயனார் வரலாற்றால் சிறப் புடையது பெருமங்கலம் என்ற சிற்றூர். நந்தனாருக்காக நந்தி விலகிய புகழுடைய திருப்புன்கூருக்கு வடக்கே அரை மைல் தொலைவில் இவ்வூர் இருக்கிறது. மண்சாலை; கோயில் முழுமையும் இடிந்துபோக, இப்போது திருப்புன் கூர் ஆலயத்தின் ஆதரவில் அதைப் புதுப்பிக்கும் திருப் பணி நடைபெற்று வருகிறது.

இவ்விடம், வைத்தீசுவரன் கோயில் ரயிலடியிலிருந்து மேற்கே 2 மைல்; ஊரானது கோயிலுக்கு வடக்கே; கோயில் தெற்கு எல்லையில்; கோயிலுக்குப் போகும் வழி

யில் மேல்புறம் ஒரு மேட்டுத்திடல்; கோட்டைமேடு என்ற பெயருடையது. இங்கு கலிக்காமர் மாளிகை (அரண்மனை அல்லது கோட்டை) இருந்தது என்றும், மிகப்பழங்காலத் திலேயே அது இடிந்து போயிற்று, கிராமமே வடக்கே நகர்ந்து விட்டது என்றும் சொல்கிறார்கள்.

இம்மேட்டுக்கு வடக்கே உள்ளதுதான் பழைய கோயில். அருகில் ஒரு சிறு குளமும் அர்ச்சகருக்கான வீடும் உள்ளன. சுவாமி பெயர் வன்றொண்டரீசர் என்றே நெடுங்காலமாக வழங்குகிறது. அம்பிகை அபிராமி. இவரே கலிக்காமரால் பூசிக்கப்பெற்றவராம். வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி இங்கு வந்து, ஏயர்கோன் சூலை நோய் நீக்கிய வரலாறு நிகழ்ந்தபின், சுவாமிக்கு முன்பிருந்த பெயர் நீங்கி, சுந்தரர் பெயராலேயே பெயர்ஏற்பட்டதுபோலும்.

மகாலிங்கம் மிகச் சிறிய திருவுரு. இரண்டு கால பூசை நடக்கிறது. விநாயகர் சிறிய உருவம் ஒன்றும், பெரிய மகாகணபதி உருவம்ஒன்றும் உள்ளன. தண்டாயுத பாணியும், சண்டேசுவரரும் இருக்கிறார்கள். அம்பிகை யும் வேறு சிறிய வடிவினராய் நர்த்தன ஸ்கந்தரும் உள்ளனர்.

திருப்புன்கூர் உற்சவத்தின் போது வருஷமொரு முறை சுந்தரர் அங்கிருந்து இங்கு எழுந்தருளுகிறார்.

சுந்தரர் பாடிய திருப்புன்கூர்த் தேவாரம் "அந்த ணாளன் உன் அடைக்கலம் புகுத அவனைக் காப்பது" என்று தொடங்குவது மிகவும் அருமையான பதிகம். அத னுள் கலிக்காமர் பொருட்டுச் சிவபெருமான் நிகழ்த்திய அற்புதங்களை அவர் விளக்கமாகக் குறிப்பிடுகிறார். திருப் புன்கூரில் சிவபெருமான் திருவடியே பற்றுக் கோடாக வாழ்ந்த ஏயர்கோன் கலிக்காமர், தம் வயல்களுக்கு நீர் இன்றிப் பயிர்கள் கருகக் கண்டு, இறைவனை வணங்கித் துதித்து. "வையகம் முற்றும் மாமழை மறந்து வயலில் நீர் இல்லை. பயிர்கள் கருகிச் சாம்பின. மழை அருள் வாயாக, உன் திருக்கோயிலுக்கு நிலங்கள் தருகின்றோம்" என்று வேண்ட, எங்கும் ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்து பெருமழை பொழிந்தது. கலிக்காமர் ஆலயத்துக்

குப் பன்னிரு வேலி நிலம் அளித்தார். ஆனால் மழை நிற்கவில்லை. பெரு வெள்ளமாகிப் பயிர்கள் வெள்ளத்தால் அழியும் நிலை வந்தது. மீண்டும் அவர் மழை நிற்குமாறு வேண்டி, மழை நிற்கவே, பன்னிரு வேலிநிலம் அளித்தார்.

வையகம் முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண் முகிலாய்ப் பரந்தெங்கும்
பெய்யுமாமழைப் பெருவெள்ளம் தவிர்த்து
பெயர்த்தும் பன்னிரு வேலி கொண்டருளும்
செய்கை கண்டு நின்திருவடி யடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உளானே.

ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர்கோன் உற்ற இரும்பிணி தவிர்த்து

என்பன சுந்தரர் பதிகத்தின் 2, 3 பாடல்கள். சேக்கிழார் பாடிய பெரிய புராணத்துள் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 409 பாடல். இது முழுமையும் சுந்தரர் சரித்திரமே.

கலிக்காமர் வரலாறு, பெரிய புராணத்துள் மானக்கஞ்சாறர் வரலாற்றிலேயே தொடங்குகிறது. இவர் தமது ஒரே பெண்ணைக் கலிக்காமருக்கு மணம் பேசி, மணச் சடங்குகள் நடைபெறும் தருணம், சிவபெருமான் இவருடைய அன்பைச் சோதிக்க மாவிரதமுனிவர் வேடத்தில் வந்து மணப்பெண்ணை வாழ்த்தி, ''இப்பெண்ணின் கூந்தல் நம் பஞ்சவடிக்கு ஆகும்'' எனவே மானக்கஞ்சாறர் தயங்காது, பெண்ணின் கூந்தலை அரிந்து, மாவிரத முனிவரிடம் தந்தார். பெருமானும் அவருக்கு அங்கேயே அருள் புரிந்தார். அப்போது அங்கு மண மனைக்கு வந்த மணமகனாகிய கலிக்காமர், முண்டிதமான பெண்ணை மணப்பது பற்றிச் சிறிது மயங்க, இறைவன் அருளினால், மயக்கம் நீங்கி, மணம் புரிந்து கொண்டு, மனைவியோடு பெருமங்கலம் வந்தார்.

நாட்கள் சென்றன. பரவையாரிடம் பெருமானைச் சுந்தரர் தூது விட்ட செய்தி கேட்டுக் கலிக்காமர் பெரிதும் சீற்றம் கொண்டிருந்தார். அவரைச் சுந்தரரோடு சேர்த்து வைக்க எண்ணிய பெருமான், அவருக்குத் தீராத சூலை நோயைத் தந்து, இந்நோய் வன்றொண்டனால்தான் தீரும் என்றும் அறிவுறுத்தினார். இது கேட்டுக் கலிக்காமர் வருந்தினார். பெருமான் வன்றொண்டர்பாலடைந்து பெருமங்கலம் சென்று கலிக்காமருடைய சூலையினைத் தீர்க்கவும் கட்டளையிட்டார். அவர் வருவதையறிந்த கலிக்காமர் அவரைப் பார்க்க மனமின்றி, உடைவாளால் வயிற்றைக் கிழித்துக் கொண்டார். சுந்தரர் வந்து, செய்தி அறிந்து தாமும் உயிர்விட முற்பட்டபோது, பெருமான் அருளால் ஏயர்கோன் உயிர் பெற்றெழுந்து. சுந்தரர் கையிலுள்ள உடைவாளைப் பற்றிக் கொண்டார். இருவரும் நண்பராயினர். அவரோடு சுந்தரர் திருப்புன்கூரடைந்து "அந்தணாளன்" என்று தொடங்கும் பதிகம் பாடினார் என்று பெரிய புராணம் கூறுகிறது. அத்தகைய சிறந்த பதி பெருமங்கலமாகும்.

நெஞ்சமும் தூதும்

(ந. வீ. செயராமன், எம். ஏ.)
விரிவுரையாளர், தமிழாராய்ச்சித் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தை ஊட்டவல்ல சாத்திர நூல்கள் பதினான்கனுள், நெஞ்சத்தைத் தூது விடுத்ததாக அமைந்த நெஞ்சு விடு தூது என்ற நூலும் ஒன்று. இது நற்றமிழ் அறிஞர் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சித்தாந்த அட்டக நூல்களுள் ஒன்று. நீறணி அம்பலவன் பால் நெஞ்சத்தை ஒருப்படுத்தும் இவ்வுயரிய நூல், சாத்திர

நூல்கள் பதினன்கனுள்ளும் தூது என்னும் சிற்றிலக்கிய வகையில் அமைந்த ஒரே நூலாகும்.

மக்களின் உறுப்புக்களில் நெஞ்சத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. போகமுறு தன்மைக்கும், செய்யுந் தவத்திற்கும், கற்றறியும் நன்மைக்கும், கொள்ளுமொரு நட்பிற்கும், வன்மைக்கும் ஈகைக்கும் நெஞ்சமே உறுதுணையாகவல்ல உறுப்பு. இல்லறத்தாரைத் துறவறத்தாராக்கவும், துறவறத்தாரை இல்லறத்தாராக்கவும் வல்லது நெஞ்சம். அறச்செயலை மறச்செயலாக மாற்றவும் மறச்செயலை அறச்செயலாக ஆக்கவும் வல்லது நெஞ்சம். நெஞ்சத்தின் சிறப்பையும் சீர்மையையும்

"...... .... —போகத்தின்
நின்றுரை மெய்த்துறவி னிற்பிப்பா யத்துறவிற்
சென்றுரை யில்லிற் செறிப்பிப்பாய்—குன்று
வறத்தை மறமாக்க வம்புவியின் மிக்க
மறத்தை அறமாக்க வல்லாய்..."

என்று துறைமங்கலம் சிவப்பிரகாசர் கூறுகின்றுர்.

தூதாக விடுக்கத் தக்க பொருள்கள் பத்து என்றும் அவை இன்னின்னவை என்றும்பாட்டியல் நூலார் வரைப்படுத்திக் கூறுவர்.

'எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை
சகிகுயில்நெஞ் சம்தென்றல் வண்டு—தொகைபத்தை

என வரும் பிரபந்தத் திரட்டில் இப்பத்துப் பொருள்கள் இன்னின்னவை என விளக்கப் பட்டுள்ளதையும், அவற்றுள் நெஞ்சமும் ஒன்றுகச் சேர்க்கப்பட்டுள்ளதையும் காணலாம். பாட்டியல் நூலார் கூறும் இப்பத்துப் பொருள்களுக்கு மேலும் பலபொருள்களைத் தூதுவிடுத்ததாகப் பிற்காலத்தில் நூல்கள் எழுந்துள்ளமையால், பாட்டியல் நூலார்கொண்ட இவ்வரையறை பொருந்தாது எனலாம்.

உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய நெஞ்சு விடு தூது நூலை அடியொற்றிப் பிற்காலத்தில் வேறுபல நெஞ்சுவிடு

தூது நூல்களும் எழுந்துள்ளன. துறைமங்கலம் சிவப்பிர காசர் இயற்றிய நெஞ்சுவிடு தூது, தத்துவராயர் இயற்றிய நெஞ்சு விடுதூது, மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய நெஞ்சு விடுதூது, சாந்தலிங்க தேசிகர் இயற்றிய நெஞ்சு விடுதூது, திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் இயற்றிய நெஞ்சு விடுதூது, கச்சியப்ப முனிவரின் மாணவர் ஒருவர் இயற்றிய நெஞ்சு விடுதூது முதலிய நூல்களும் நெஞ் சைத் தூது விடுப்பதாக அமைந்த தூது நூல்களேயாகும்.

நெஞ்சுவிடு தூது நூல்களுள் பெரும்பாலானவை தத் தம் ஞானக்குரவர் மீது அவருடைய சீடர்கள் இயற்றியன வாகவே உள்ளன. உமாபதி சிவாச்சாரியார் மறைஞான சம்பந்தர் மீதும், சிவப்பிரகாசர் சிவஞானபாலைய தேசிகர் மீதும், தத்துவராயர் சொரூபானந்தர் மீதும், மீனாட்சி சுந்தரம் பிள்ளை சுப்பிரமணிய தேசிகர் மீதும், திருப் போரூர் சிதம்பரசுவாமிகள் குமாரதேவர் மீதும், கச்சியப் பரின் மாணவர் கச்சியப்பர் மீதும் இந்நெஞ்சு விடுதூது நூல்களை இயற்றியுள்ளனர்.

இந்நெஞ்சு விடு தூது நூல்கள் தத்துவச் சாயலுடை யனவாகவே விளங்குகின்றன. தூது நூல்கள் அனைத் துள்ளும் நெஞ்சத்தைத் தூதாக விடுத்துப் பாடப்பெற்ற நூல்களே இத்தகைய பெற்றியுடையனவாக விளங்குகின் றன. பரணி என்னும் சிற்றிலக்கிய வகையில் மோக வதைப் பரணி, பாசவதைப் பரணி போன்ற நூல்கள் தத்துவச்சாயலுடையனவாக விளங்குதல் போன்று தூது இலக்கியத்தில் நெஞ்சு விடுதூது நூல்களும் தத்துவச் சாயல் பெற்று விளங்குகின்றன. மேலும் கிளி, வண்டு முதலியவற்றைத் தூதாக விடுத்துப் பாடப்பெற்ற நூல் களினும் நெஞ்சைத் தூதாக விடுத்துப் பாடப்பெற்றநூல் களே எண்ணிக்கையில் விரிந்தனவாயுள்ளன.

உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சு விடுதூது நூலே தூது நூல்களுள் காலத்தால் முந்திய தூதுநூல். தூது என்ற கருப்பொருளைத் தனியொரு சிற்றிலக்கியமாக உரு வாக்கிய பெருமை கொற்றவன் குடியாரையே சாரும்.

தன் நெஞ்சைத் தலைவி, தலைவன் பால் தூதாக விடுக்கும் முறை இலக்கியங்கள் பலவற்றுள்ளும் காணக் கிடக்கின்றது.

'உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்'

என்பது தொல்காப்பியப் பொருளியல் சூத்திரப் பகுதி இதுவே, நெஞ்சைத் தூது விடுக்கும் இலக்கியத்தைப் பிற்காலத்தில் தோற்றுவிக்க உதவும் இலக்கண விதியாக விளங்குவது.

சூழ்கம் வம்மோ தோழிபாழ் பட்டுப்
பைதற வெந்த பாலை வெங்காட்டு
அருஞ்சுர மிறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்சம் நீடிய பொருளே.

என்பது ஐங்குறுநூறு. இச்செய்யுளில் நெஞ்சைத் தூதாக விடுத்த தலைவியொருத்தி அதுபற்றித் தன் தோழியிடம் கூறுவதைக் காண்கின்றோம்.

கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யான்
நெடும்கடை நின்றதுகொல் தோழி—நெடுஞ்சினவேல்
ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் நெஞ்சு.

எனவரும் முத்தொள்ளாயிரச் செய்யுளில், தலைவனிடம் தூது சென்ற தன்னெஞ்சம் அவன் செவ்வியறியாது நெடுங்கடையில் நின்றதோ? என ஐயுற்றுக் கூறும் தலைவி ஒருத்தியைக் காண்கின்றோம்,

மேலும் திருக்கோவையார் போன்ற தத்துவச் சாயலுடைய அகத்துறை இலக்கியங்களில் காணப்படும் மனத்தொடு நேர்தல் முதலிய துறைகளிலும் நெஞ்சைத் தூது விடுக்கும் பொருள் கருவாக அமைந்துள்ளதைக் காண்கின்றோம். ஆற்றாமையால் மடலேறத் துணியா நின்றான் தலைவன் எனத் தோழியால் வன்மொழி கூறக் கேட்ட

தலைமகள், அதற்குத்தான் ஆற்ருளாய்த் தலைமகனைக்காண வேண்டித் தன் மனத்தோடு கூறி நிற்பதே மனத்தொடு நேர்தல் என்னும் துறையாகும்.

‘‘பொன்னுர் சடையோன் புலியூர் புகழா ரெனப்புரிநோய்
என்ன லறிவில்லை யாரெனென் றுரைக்கிலன் வந்தயலார்
சொன்ன ரெனுமித் துரிசுதுன் ஞமைத் துணைமனனே
யென்னுழ் துயர்வல்லை யேற்சொல்லு நீர்மை இனியவர்க்கே

என்ற திருக்கோவையார்ப் பாடலில் தலைவிதன் நெஞ்சினை விளித்து ‘என் ஆழ்துயர் வல்லையேற் சொல்லு இனியவர்க்கே’ என்று வேண்டிக் கேட்பதைக் காண்கின்ருேம். திருக்குறளிலும் நெஞ்சொடு கிளத்தல், நெஞ்சொடு புலத்தல் முதலிய துறைகளில் அமைந்த பாடல்களிலும் நெஞ்சைத் தூதுரைத்து வருமாறு வேண்டும் கருப் பொருள் விரவிக் கிடத்தலைக் காண்கின்ருேம்.

இங்ஙனம் தூதுரைக்கும் பொருள் ஆங்காங்கே விரவிக்கிடந்தாலும் அவற்றை ஒருவரையறைப் படுத்தித் தனியொரு சிற்றிலக்கியமாக உருவாக்கியவர் உமாபதி சிவாச்சாரியார். உமாபதி சிவத்தின் நெஞ்சு விடுதூது 129 கண்ணிகளால் இயன்றுள்ளது.

... ... பொறியிலியேன்
வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனியென் தம்பிரான்

என்று தன் ஞானக்குரவாகிய மறைஞான சம்பந்தரைக் குறிப்பிட்டுள்ளார். ஞானக்குரவரைக் கடவுளின் அம்சமாகவே எண்ணிப் பாடுதல் நெஞ்சு விடுதூது நூல்களில் மரபு. திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் போரூர் சென்ற காலை முருகனே அவரது ஞானுசிரியராகிய குமார தேவர் போன்று உருவெடுத்து அவருக்கு அருள் புரிந்து மறைந்ததாகவும், கடவுள் குமார தேவராக உருவெடுத்து வந்த அருட்டிறத்தைப் போற்றிக் குமார தேவர் நெஞ்சு விடுதூது பாடியதாகவும் உள்ள திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் வரலாறும் இம்மரபை வலியுறுத்துவதாக உள்ளது.

பாட்டுடைத் தலைவன் பவனி வருங்காலை, அவன் மெய்யழகில் மையல் கொண்ட தையல் ஒருத்தி தன் கருத்தழிந்து நிற்கின்றாள். பவனி வந்த தலைவன் தலைவியைக் கண்டான். இறைவனின் அருள் நோக்கம் பட்ட உயிரின் நிலை எதுவோ அந்நிலையைத்தான் அடைந்ததாகத் தலைவி கூறுகின்றாள். இறைவனின் அருள் நோக்கம் பட்ட மாத்திரத்திலேயே பழைய வினை, பஞ்சமலம் ஆகியவைநீங்கின. அந்தப் பேரின்ப அனுபவத்தை

... ... ஏத்தரிய
தொண்ணூற் றறுவர்பயில் தொக்கிற் றுவக்கறுத்தான்
கண்ணூறு தேனமுதம் காட்டினான்—வெண்ணீறும்
வேடமும் பூசையுமே மெய்யென்றான் பொய்யென்றான்
மாடையும் வாழ்க்கை மனையுமே''

என்று உமாபதிசிவம் கூறுகின்றார். அருள் நோக்கம் பெற்றவுயிர் இல்லற வாழ்க்கை பொய் யென்றும் துறவு வாழ்க்கையே பேரின்ப வழி காட்டுவது என்றும் உணர்ந்தது. திருவைந்தெழுத்தை நெஞ்சமுத்தி அதனை உச்சரிக்கும் முறைமையையும் உயிர் உணர்ந்தது. இங்ஙனம் உயிரின் பேரின்ப அனுபவத்தைத் தலைவி விளக்குகின்றாள். பின்னர் இறைவனின் பெருங்கருணைத் திறம் விளக்கப்படுகின்றது. 'கைமழுவன் அத்தன்பால் நீசென்றடையும் இடத்தை எலாம் சித்தம்சேர் நெஞ்சமே செப்பக் கேள்' என்றுரைத்து நெஞ்சம்தூது செல்லவேண்டியநெறியினைத் தலைவி உரைக்கின்றாள். இங்கு உலகாயதர், மாயாவாதிகள், புத்தர், சமணர், வைதிகர் முதலிய புறச் சமய வாதிகளின் கொள்கைகளை எளிய முறையில் விளக்கி, அவற்றிலெல்லாம் கருத்தழியாது செல்லவேண்டும் என்று நெஞ்சத்திற்கு அறிவுரையும் கூறுகின்றாள்

... ... நித்தலுமே
பூசிமுடித் துண்டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி
யாசைதனிற் பட்டின்ப ஆர்கலிக்குள் நேசமுற
நின்று திளைக்கும் இதுமுத்தி யல்லதுவே

றென்று திளைக்கும் அதுமுத்தி-யன்றென்று
இலகா இருளலகை போல்இகலே பேசும்
உலகாயதன்......'’

உலகாயதன், நித்தலும் சரீரத்திற்கு மணப்பொருள் பூசி, மாலைகள் முடித்து, பலவகை அன்னங்கள் உண்டு, விலையுயர்ந்த ஆடைகள் அணிந்து, மாதர்களின் சேர்க்கையிற் பட்டுத் திளைக்கும் இதுவே முத்தி என்றும் இது வல்லாது உடலுக்குள் ஆன்மாவும் சிவனும் உண்டென்றும், அந்தச் சிவயோகத்தை ஆன்மா அசரீரியாய் இரண்டறற்றுப் புசிக்கும் என்றும் கூறுவது இல்லையென்றும் பேசுவான். பல காலும் தாம் பிரமம் கண்டவர் போல் தம்மைக் கண்டு, ஆங்கு அதுவே நான்பிரமம் என்று கூறுவது மாயாவாதிகள் இயல்பு. அறமே தெய்வமென்றும், நட்பு பகை இரண்டினிடத்தும் விருப்பு வெறுப்பு அற்று ஒத்திருப்பதால் அப்புண்ணியம் பெறலாம் என்றும், தன் ஊன் வளர்க்கச் சில ஜந்துக்களைக் கொல்வது கொலையல்ல என்றும் கூறுவர் புத்தர்கள். மயிர் பறித்து, துயில் அகற்றிச் சீவரந்தாங்கி, உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் பஞ்ச கந்தம் கெட இருப்பதே முத்தி என்று உரைப்பர் சமணர். ஆதி மறை ஓதினும் அதன் பயன் இன்னதென்று அறியாதவர் வைதிகர். இங்ஙனம் பிறசமயவாதிகளின் கொள்கைகள் விளக்கப்படுவதுடன் இவர்கள் வழி சாராமல் செல்க என்றும் தலைவி நெஞ்சினை வேண்டுகின்றாள்.

நூலின் முற்பகுதியில் சிவபெருமானின் பரம்பொருள் உண்மை பரக்கப் பேசப்படுகின்றது. திருமால் பிரமன் ஆகியோர் தேடியும் அறிய முடியாத இயல்பினன்; இந்திரனும் வானோரும் ஏனோரும் கண்டறியவியலாதவன்; மந்திரமும் வேதமும் வேத முடிவின் விளை விந்துவும், நாதமும் காணா நலத்தினன்; ஓத அரியான்; எளியான்; அளவிறந்து நின்ற பெரியான்; பெண்பாகன்; தெரியா அருவான்: உருவான்; அருவுருவமல்லான்; மரியான்; மரிப்போர்மனத்தான்; பரிவான் மெய்யர்க்கு மெய்யன், வினைக்கு வினையாயினன்; என்றெல்லாம் சிவபெருமானின் தன்மைகளையும்

அவன் அடியவர்க்குச் செய்யும் நன்மைகளேயும் ஆசிரியர் அழகுற விளக்கியுள்ளார். படநாகம் பூண்ட அப்பரமன் புகழை பசுவின் இடமாய் நிறைந்த அவ் இறைவனின் இயல்பை மிகவும் எளிய முறையில் ஆசிரியர் விளக்கியுள்ளது பாராட்டத்தக்கதாகும்.

பாட்டுடைத் தலைவனின் தசாங்கங்களைச்சிறப்பித்துப் பாடுவது நெஞ்சுவிடு தூது நூல்கள் மட்டிலுமன்றி எல்லாத் தூது நூல்களிடையேயும் காணப்படும் மரபு. அதற்கேற்ப, பாட்டுடைத் தலைவராகிய மறைஞானசம்பந்தரின் தசாங்கங்கள் இன்னின்னவை என்பதை விளக்குகின்றார் ஆசிரியர். ஆனந்தமாகிய நதியும், சுருதியாலும் ஆகமங்களாலும் அறிய இயலா சிற்சத்தித் தானமாகிய நாடும்; ஆன்மாக்கள் உள்ளத்தில் உள்ள பரிபூரண சிவஞானமாகிய ஊரும், ஆன்மாக்களைத் தன்வயப்படுத்தும்அருளாகிய மாலேயும், எண்ணுவார் எண்ணத்தில் நீங்கில்லாமல் நிற்கும் வாசியும், ஞானமாகிய யானேயும், துன்பச்சுமை நீக்கும் முரசும், அன்பர்கள் உள்ளத்துள்ளபேரொலியாகிய பேரிகையும், உலகமெங்கும் ஒளிரும் ஆணேயும், கலைஞானமாகிய ஆட்சியும் தனதுதசாங்கங்களாகப்பெற்றுவிளங்குகின்றார் இந்நூலின் பாட்டுடைத் தலைவர்.

இத்நூலாசிரியரின் சிறந்த திருக்குறட் பயிற்சிக்குச் சான்றாக

''தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவரென்று-நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்''

எனவரும் பகுதியைக் காட்டலாம். இக்குறளைத் 'துறவு' என்னும் அதிகாரத்தில் காண்கின்றோம். பொருள்களையும் இருவகை உடம்பினையும் உவர்த்து பற்றற விடுத்தவர் வீட்டுநெறியைத் தலைப்பட்டவர்கள் என்றும், அவற்றுள் யாதானும் ஒன்றன்மீது மயங்கி பற்று வைத்தவர்கள் பிறவி வலைக்குள் அகப்பட்டவராவர் என்பதும் இக்குறளுக்குப் பொருள். சைவம் அல்லாத பிற சமயங்களைப்

பற்றி நின்று அதனால் பாவமென்னும் கடலில் அழுந்தியதாகக் கூறுகின்ற இடத்தில் கருத்து விளக்கத்துக்காக இக்குறளை எடுத்தாண்டுள்ளார்.

சிவனாகவே விளங்கும் ஞானக்குரவரைத் தலைவராகவும் தம்மையே ஒரு தலைவியாகவும் உருவகித்துப் பாடுகின்ற முறையில், பதியை அறிந்து பதியைச் சேரப்பற்றுக் கொண்ட உயிரின் பேரின்ப அனுபவத்தை இந்நூலில் விளக்கிக் காட்டுகின்றார் உமாபதிசிவாச்சாரியார். உமாபதி சிவாச்சாரியாரின் இந்நெஞ்சுவிடுதூது மட்டுமின்றிப் பிற நெஞ்சு விடுதூது நூல்கள் அனைத்திலும் இதுவே தத்துவப் பொருளாக மிளிர்கின்றது.

கோவில்களும்—சமயப் பிரசங்கங்களும்

(சி. வை. வன்னியநாதன், வரணி, இலங்கை)

சைவசமயத்தவராகிய நாங்கள் கோவில்களிலே சென்று அன்போடு சுவாமிதெரிசனம் செய்யுமியல்புடையவர்கள். அவர்களுக்கு நம் சமய உண்மைவிளங்கும்படி கோவில்களிலே கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள்புராணம், சிவராத்திரி புராணம் முதலியவை படனம்செய்யும் வழக்கம் இன்றும் இருந்துவருகின்றது. ஆயினும் முற்காலம போலப் புராணசிரவணம் செய்ய அதிகசனங்கள் போவது குன்றிவிட்டது. சமயப்பற்றுக்குறைவும், புராணசிரவணத்தால் வரும் பயனை யறியாமையுமே அதற்குக் காரணம். கந்தபுராணத்திலே வேதசிவாகம உண்மைகள் பல கூறப்பட்டிருக்கின்றன. உமை தைலமீந்து படலத்திலேசிவத்தினது சொரூப

லட்சணமாகிய உண்மையிலே தொனிக்கிறது. இன்னும் பல சமய உண்மைகள் பிரகாசிக்கின்றன. அது ஒன்றே நம் சமய உணர்ச்சிக்குப் போதிய நூலென்னலாம். வேதசிவாகம உண்மைகளைப் பலசரித்திரவாயிலாக எடுத்துரைப்பதே புரா ணங்களின் தாற்பரியம்.

திருவாதவூரடிகள் புராணத்திலோ திருப்பெருந் துறைச் சருக்கத்தில் சைவசித்தாந்த உண்மைகள் இலகு வாகவிளங்குகின்றன. திருத்தணிகைப்புராணம், காஞ்சிப்புரா ணம், திருவானைக்காப்புராணங்களில் சைவசித்தாந்த நலன் கள் இருக்கின்றன. மாயாவாதிகளுக்கெல்லாம் ஆங்காங்கே சமாதானம் கூறப்பட்டிருக்கிறது. பெரியபுராணத்தில் பக் திரசம் பழுத்துச்சொட்டுதலை உணராதாரெவர்? இங்ஙனம் புராணங்கள் வாயிலாகச்சமயஉண்மைகளை உணரக்கிடந்தும் அழியவிடுகிறார்கள். இதை அறியாமை என்றே கூற வேண்டும்.

இக்காலத்தில் சமய உண்மைகளைப் பிரசங்கம்ஒன்றி னாலே போதிக்கமுடியும். பிரசங்கமென்றால் எச்சமயத் தாரும் விரும்பிக் கேட்பர். பண்டிதன்முதல் பாமரன் வரை யிலும் வசீகரப்படுத்த வேண்டும். காதுக்குஇனிமையும் கண்ணுக்குஅழகும் நாவுக்குருசியுமாய் அமைய வேண்டும். இவ்விஷயத்தில் கோவில் தர்மகர்த்தாக்கள் போதிய கவ னம் செலுத்தவேண்டும்.

ஆதீன கர்த்தாக்கள் இக்காலத்திற்கு ஏற்றநன்மை களைச் செய்தலில் மிகவும் கருத்துடையவராய் இருக்க வேண்டும். பாதிரிமார், கிருஸ்துமத போதனையைத் தங்கள் கோவில்கள் மூலம் நடத்துகின்றார்கள். கிருஸ்தவக் கோ வில்களுக்குப் போனால், அங்கேசமயபோதனைசெய்தனுப்பு கின்றார்கள். ஆனால், இந்துக் கோவில்களிலே யாவர்க்கும் பயன்படத்தக்க போதனைகள் என்ன நடக்கின்றன?

பாதிரிமார் சமயநிந்தை, விக்கிரகாராதனை நிந்தை, சைவக்கிரியா நிந்தை, முதலியன செய்து இந்துக்களின் அறி

வைக் கெடுத்துவிடுகிறார்கள். உத்தியோக மோகம் பிடித்த நம் சிறார்கள் கிறிஸ்தவமத பாடசாலையில்கல்வி பயிலுவதால் உணர்ச்சியும், தெய்வபக்தியும் குன்றிவிடுகிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்குச் சமயஉணர்ச்சியோதெய்வ உணர்ச்சியோ மனத்தில் தோன்றுமா? இப்படிப்பட்ட காலங்களிலே சம யாசாரியர்போலவும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போலவும் நம் மவர்களிடையே தோன்றினால், அதுநாம் பெற்றபாக்கியமே. ''சைவம் தழைத்தோங்கச் சம்பந்தர் அவதரித்தார்,,என்று ஒரு வாக்கியம்.

திருவிழாக்காலங்களில்முரட்டுத்தனமுள்ளவாலிபர்கள் மூக்கு முட்டிய கள்ளு,சாராயம் குடித்துவிட்டு, கையில் சுருட்டு, தீப்பெட்டி தாங்கியவண்ணம்,போர்த்த போர்வை எடுக்காமல் சிரித்து விளையாடிக்கொண்டு,சுவாமி வீதியுலா வும் திருவீதிகளைத் தமது அசுத்தம் நிறைந்த உமிழ்நீரினால் திருமெழுக்குத்தொண்டு செய்கிறார்கள். ஆங்காங்கே நடக் கும் சண்டை கோபங்களுக்கெல்லாம் முடிவெடுக்க வந்து தடியடி,கத்திக்குத்து விளையாடுகிறார்கள். இவர்களுக்கெல் லாம் சன்மார்க்க போதனை செய்ய வேண்டும். கோவில் களிலே தகாதசெயல்களைப் புரியும் இவர்கள் மீது கடுந்தண் டனை விதிக்கவேண்டும். வாண வேடிக்கைகளுக்கும், மின் சார தீபங்களுக்கும், தாசிநடனங்களுக்கும் செலவிடும்பணத் தில் ஒருபகுதியைப் பிரசாரகர்களுக்காகச் செலவிட்டால் நஷ்டமாகுமா? இந்த மதிமயக்கமுடைய மது வகைகளை அருந்தும் அன்பர்களுக்கு, ஓர் அரிய வாக்கியம் என்நினை விற்கு வருகிறது. அதுவருமாறு:-

'' சாராயம் ஒருசாமம் தானேதான் சீரணிக்கும்
பூராயமெல்லாம் சொல்லும் புத்திகெடும்— அறிவுகெடும்
தீராத குடல்காயும் ஈரலறும் தீயர்பாற் சேர்க்கும்
வாராத மரணமென்றே வழுத்து'' என்றும்,

''காதவிந்தூறும் களிர் பாண்டொடு சோபை
வாதபித்தங் கிராணி வன்காப்பன்—— பேதியிவை
பொங்கி யதிகரிக்கும் புத்திகெடும் மேகமுண்டாம்
தெங்கின் மதுவுக்கென்றே செப்பு.''

ஆலயதர்மகர்த்தாவாகஅதன்வருமானத்திற்கும் கோவிலின் நிர்வாகத்திற்கும் பொறுப்புடையவர்கள் அவைகளைச் சீரான முறையில் நடாத்தி சைவப் பிரசாரகர் ஒருவரை நியமித்து வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் விசேஷ நாட்களில் சமயப் பிரசாரம் செய்வித்தால், வருங்காலச்சிறுர்கள் சமயப் பிரசாரம் உடையவர்களாய் விளங்க உறுதுணையாயிருக்கும்

பயிர்களுக்கு வேலிதான் காவலாய் இருப்பதுபோல தர் மகர்த்தாக்களும் ஆலயங்களுக்கு அப்படியே. ஆனல் வேலி பயிரைமேய்ந்த கதைபோல அவர்கள் நடந்து கொண்டால், அதற்கு அத்தெய்வமே சாட்சியாகும். ஆதலால், ஆங்காங் குள்ள விவேகிகள் தர்மகர்த்தாகளுக்கு உதவிபுரிய வேண் டும். தெய்வம், அக்கினியையொத்ததாகும் நமது மனச்சாட் சிக்கு மாறில்லாத வகையில் நாம்செயல் புரியவேண்டும்

சிலர், ஆலயங்களிலே சிவத்தொண்டு புரிபவர்கள் போலப் பாசாங்கு செய்து, அங்குவரும் காணிக்கைகளை அபகரித்துச் சென்று, தமதுசுயதேவைகளைப் பூர்த்தி செய்கிருர்கள். இதை நாம் அனேக இடங்களில் நேரில் காண முடியும். இப்படிப்பட்ட பாதகச்செயல்களுக்குக் கடவுள் எப்போது விடை கொடுப்பாரோ? அறியோம்! அறியோம்!!

ஞானப்பாடல்

(அம்பை சங்கரனர்)

உலகத்திலுள்ள மக்களுக்கு மிக இன்றியமையாது வேண்டற்பாலன உண்டி, உறையுள் முதலியன. இவை அழியுந் தன்மையவாய உடலைப் பேண நிமித்தமே வேண்டும்நிலையிலுள்ளன. இவை இல்லையேல் உடம்பார் அழி வர். அதன் காரணமாக உடப்புளே கோயில் கொண்டிருக் கும் உத்தமனும் நீங்குவான். அதனல் "உடம்பை வளர்த் தேன் உயிர் வளர்த்தேனே" என்பர் திருமூலர். உடம்பை

வளர்ப்பதற்கு மூலகாரணம் உயிரை வளர்ப்பதே என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. அவ்வடிப்படையை மறந்தே தற்கால உலகில் மக்கள் பலர் வாழ்கின்றனர். ஆக்கைக்கே இரை தேடி அலமந்து காக்கைக்கே யிரையாகிக் கழிகின்றனர். உயிர் நிலைபெற்றிருக்க உடம்பு இன்றியமையாதது. அதனுல்தான் உடம்பு பேணற்குரியதாயிற்று என்பதனை மனத்திருத்தல் நன்று.

அவ்வுயிருக்கும் இன்றியமையாது வேண்டற்பாலன பலவுள. அவைகளுள் முக்கியமானது ஞானம். இந்த ஞானம் என்பது பொதுப் பெயராயினும் "இறைவனடி ஞானமே ஞானமென்பர்" என்ற சித்தியாரின் கொள்கை பற்றி மக்களால் நல்லறிவுக்கே, மெய்யறிவுக்கே ஞானம் எனப் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. நாற்றம் என்ற சொல் நறுநாற்றம், தீநாற்றம் என்ற இரண்டுக்கும் பொதுவாய் வரினும் சிறப்பாகத் தீநாற்றத்திற்கே வழங்கும் மரபுப்படி ஞானமென்ற சொல்லும் மெய்ஞ்ஞானம், அஞ்ஞானம் என்ற இரண்டுக்கும் பொதுவாயிருக்கினும் சிறப்பாக மெய்ஞ் ஞானத்திற்கே சான்றேர்களால் வழங்கப்படலாயிற்று.

இஞ்ஞானம்பற்றி நம்சாத்திரநூல்களில் பலபடப்பரக்கக் காணலாம். பதிஞானம், பசுஞானம், பாசஞானம் எனப் பிரிப்பர். மெய்ஞ்ஞானம், அஞ்ஞானம் எனவும் பரஞானம், அபரஞானம் எனவும் பல்வேறு நிலைகளுக்கு ஏற்ப இதனை ஆன்றோர்கள் பிரித்துணர்வர். அவற்றுள் மெய்ஞ்ஞானத்தை வளர்க்கக்கருதி மக்கள்மேற்கொள்ளும் முறைகளுக்கு ஞானபூசை என்பது பெயராகும்.

"ஞானநூல் தனையோதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்ரு
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை"

என்ற சித்தியாரின் வாக்கையுணர்க.

இவ்வாறு ஞானபூசை மேற்கொண்டு உயர்வடைந்த பெரியோர்களே நம் அறுபான் மும்மை நாயன்மார்களாவர்,

அவர்களுள் தலையாயவர்கள் நம் சைவ சமய குரவர்களே யாவர். அவர்கள் ஓதியருளிய பாடல்கள்யாவும் ஞானப் பாடல்கள் என்பதில் ஐயமேயில்லை. நால்வர் பெருமக்கள் பாடிய பாடல்கள் யாவும் ஞானப்பாடல்கள் எனப்பொதுப் படக்கூறினும் அவற்றுள்ளும் அப்பர் பெருமானார் பாடிய வைக்கே சிறப்பாகப் பொருந்தும். அப்பழம்பாடல்கள் அழியும் வாழ்வு நடத்துகிற மக்களை இடித்துரைத்து அழியா வாழ்க்கைக்கு ஈர்த்துச் செல்கின்ற தன்மை வாய்ந்தவை. அதனாலேயே கச்சியப்பமுனிவர் அப்பர்பெருமானைப் போற்றுமுகத்தான் பாடிய துதியுள் நம் உள்ளக்கிழியுள் அவர் உருவெழுது முகத்தான் ஒரு அருமையான சித்திரத் தினை வரைந்து காட்டுகின்றார். அது வருமாறு:—

இடையறுப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்திண்
படையறுத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறுப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறுச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து வாழ்வாம்.

என்பதாம். இதில் அப்பர் பெருமான் திருவாயிலிருந்து இடையறாது ஞானப்பாடல் தொடர்ந்து வந்துகொண்டே யிருக்கும் என்று விளக்குகின்றார்.

இனி அவர் மக்களுக்கு அறிவுரை கூறும் தன்மையால் அருளிய சிலபகுதிகளைக்கீழே காண்போமாக.

அப்பர் ஆரவாரப் பூசைகளை அறவே வெறுக்கின்றார். இறைவனை மனம் ஒன்றித்து நின்று உருகிப்பாடினால் அவன் அருள் செய்வான் என உறுதி கூறுகிறார்.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும்நீ ரும்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.

என அவனை வழிபடும் முறையைத் தெற்றென விளக்குவதை அறியலாம்.

சிலர் இறைவனைப்பற்றி நினையாது தம் காலத்தை அவமே கழிக்கின்றனர். அவர்களை நினைந்து அப்பர் மிகவும் துன்புறுகிறார். கிடைத்தற்கரிய மானுடப் பிறவியைப் பெற்றிருந்தும் அதனாலாய முழுப் பயனையும் நுகராது வீணே வாணாளைக் கழிக்கிறார்களே என அவர்கள் பொருட்டு மிகவும் இரங்குகின்றார். இவ்வுடலை இவ்வுலகத் துயிரோடு கூட்டியனுப்பிய இறைவன் என்றாவது ஒருநாள் பிரித்து விடுவானே. அதற்குள் செய்யத்தக்கன செய்ய வேண்டாவோ? என்று மக்களின் அறியாமை குறித்து மனமாழ்குகின்றார்.

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்று கின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்ப ரீசனே.

அவன் நம் நடைமுறைகளையெல்லாம் உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருப்பதோடு மட்டுமன்றிச் சிறிதும் விடாது பின்னவாய்ப்பாட்டுடன் கணக்கும் எழுதிக் கொண்டிருக்கின்றானே. அதனாலேயே அவனுக்குக் 'கணக்கறியும் பெருமாள்' என்ற ஒரு பெயருமுண்டு. ஆகவே எங்குமுளனொருவன் கவனித்துக் கொண்டிருக்கிறான் என நினைந்து அங்கங் குலைந்துருகி நல்வழியில் நடக்க முனைய வேண்டாவோ? அவனைப்பற்றி எண்ணி இறும்பூது எய்தவேண்டாவோ? எனப்பலவாறு கூறி வருந்துகின்றார்.

சாத்திரம் பலபேசும் சழக்ர்காள் !
கோத்திரமும் குலமும் கொண் டென்செய்வீர் ?
பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே.

என்பதைத் தெரிந்தும் வீணே அவனை நினையாது நீர் அலைதல் அழகலவே என அவர் அழுத்தமாகக் கூறும் அழகினைத் துய்த்தல் நலம் பயக்கும்.

அப்பர் பெருமானார் அறிவற்றமக்களைப் பார்த்து விளித்துக் கூறுகின்றார். ஏழைகாள்! என்று அழைத்தார். இங்கு பணத்தால் அன்றி அறிவால் ஏழைகள் என்பதே

பொருந்தும். நான் உங்களுக்கு உய்யும் வழி ஒன்று உரைக்கின்றேன். சிறந்த பவப்பிணிபோக்கும் மருந்து ஒன்று கூறுகின்றேன். உடற்பிணிபோக்கும் மருந்து மக்களுக்குத் தற்காலிகமாக நன்மைதரவல்லது. ஆனல் நான் கூறும் பவப்பிணி போக்கும் மருந்தோ என்றும் நன்மைதரவல்லது. அம் மருந்து யாது?

இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்
அருந்தவம் தரும் அஞ்செழுத்து ஓதினல்
பொருந்துநோய் பிணிபோகத் துறப்பதோர்
மருந்தும் ஆகுவர் மன்னும் மாற்பேறரே

என்று மருந்தின் தன்மையினை விளக்கிக் கூறிவிட்டார்.

மேலும்

கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலினர் கிடந்து ஊர்முனி பண்டமே
நெஞ்சமே!
வண்டுலா மலர்ச் செஞ்சடை ஏகம்பன்
தொண்டனய்த் திரியாய் துயர் தீரவே
ஓது வேதியனர் திருவொற்றியூர்
பாதம் ஏத்தப் பறையும் நம் பாவமே
மலையே வந்து விழினும் மனிதர்காள்!
நிலையி னின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவணங்கிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே
வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடற
நைஞ்சு நைஞ்சுநின்று உள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா அண்ணலே
குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே
நெஞ்சி லேவர் நினைக்க நினைக்குறர்
பஞ்சின் மெல்லடி யாளுமை பங்கவென்று
அஞ்சி நாண்மலர் தூவி யழுதிரேல்
வஞ்சந் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே

என்பன போன்ற அப்பரின் அமுத மொழிகளை நோக்குமின். இவைபோன்ற அருள்வாக்குகள் இன்னும் கணக்

கற்றனவாயுள்ளன. அவைகளையெல்லாம் ஈண்டு விரிக்கிற் பெருகும் அப்பர் தேவாரத்தை முறையே ஓதித்தான் பயன் துய்க்கவேண்டும்.

இவ்வாறு சிறந்து விளங்குவதாற்றான் இவர் பாடல்களுக்கு "ஞானப்பாடல்" என்ற அருமைப்பெயரைக் கச்சியப்பர் கொடுத்துள்ளார். கச்சியப்பர் போன்ற பிற சான்றோர்களும் அவர் பாக்களைப் பலவாறு போற்றியுள்ளனர். கற்பனைக்களஞ்சியம் என்று கற்றோரால் போற்றப் பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் "அப்பர் பாடல் இறையருளில்தோயச்செய்து வீட்டை அளிக்கவல்ல வாயிலாகும்" என்ற பொருளில் "வீட்டிற்கு வாயில் எனுந் தொடை" என்று இஞ்ஞானப் பாடலைப் பற்றித் தன் கருத்தைக்கூறிக் கச்சியப்பர் கருத்துக்கு அரண் செய்கிறார்.

இத்தகைய ஞானப்பாடல்கள் நம் தெய்வத்தமிழில் முதல் நூலாக அமையப்பெற்றிருப்பது நம் முன்னையோர் செய்த தவப்பேறன்றோ! அதனை நாம் எவ்வளவு நன்றாய்ப் போற்றவேண்டும்? போற்றுவதோடமையாது நன்றாய்ப் படித்து இளைஞர் முதல் முதியர் ஈறாக யாவரும் தத்தம் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டாவா? மனித முயற்சியால் முடியாதவைகளும் இறையருள் கிட்டின் எளிதில் கைகூடுமன்றோ! நம் பாரத பூமியை வஞ்சமனத்தர் வவ்வ நினைத்துப்படையெடுத்திருப்பதை யாவரும் அறிவர். படைக்கலம் கொண்டு வெருட்டலோடமையாது இத்தகைய ஞானப்பாடல்களையும் ஓதி இறையருளை நோக்கி எதிர்பார்த்திருப்பின் அவன் அருள் செய்வது திண்ணம். ஆகவே படித்தற்கு அமைவில்லாதவற்றைப் படியாது "அமைவுடைய கற்பவே" என்பதற்கேற்பத் தக்கனவற்றைக்கற்று உலகத்துயிர்கள் ஓங்கியின்புற்றிருக்கஆவனசெய்வார்களாக. நம் தமிழ் மொழியில் ஞானப்பாடல்களுக்குக் குறைவேயில்லை. அவற்றைப்படித்து உருகவல்ல ஞானந்தான் இன்றியமையாது வேண்டியிருக்கின்றது. அதனை எல்லாம் வல்ல பெருமான் அருளி இடர்ப்பட்டுழலும் மக்களை முன்னேற்றியருள்வானாக.

வாழ்க உலகெலாம்.

வடமொழிச் சிவஞான போதம் ஏன் வந்தது ?

மு. அ.

சிவஞானபோதம் முதல் நூல் தமிழ் நூலா, வடமொழி நூலாகிய ரௌரவாகமப் பகுதியா; அது வழங்குகிறதா, என்றாகிலும் வழங்கிற்றா ?—இவைபோன்ற கேள்விகள் இன்றைக்குத் தேவையில்லாதவை. இந்த இருபதாம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியில் இது முக்கியத்துவமுடைய ஒரு கேள்வியாயிருந்தது. மிகவும் திறமையாகவும் இனி பேச்சுக்கு இடமில்லாதபடியும் இவற்றைச் சைவ சித்தாந்தப் பெருந்தலைவராயிருந்த ம. பாலசுப்ரமண்ய முதலியாரவர்கள் 1949-ம் ஆண்டுச் சித்தாந்த மலர் பக்கம் 169–195 இல் முடிவு செய்திருக்கிறார்கள். மேலும் சில கருத்துக்கள் 1964 மே சித்தாந்த இதழ் பக்கம் 148–152-இல் சொல்லப்பட்டுள்ளன: இங்குச் சொல்லிய முடிவு, தமிழ் முதனூலாகிய மெய்கண்டாரின் சிவஞான போதத்தை 1488–1564 ஆகிய கால எல்லைக்குள் சிவாக்கிர யோகிகளே மொழிபெயர்த்திருக்கலாம் என்பதே.

இனி தமிழ் மக்களிடையில் தமிழிலே நூல் ஏற்பட்டிருக்கும்போது, அது புது நூலாயும், மூல நூலாயும் அமைந்திருக்கும்போது, வடமொழியில் அதை ஏன் ஒருவர் மொழி பெயர்க்கவேண்டும் என்பது கேள்வி. இக் கேள்விக்கு அனைவரும் எளிதாகப் பதில் சொல்வார்கள். வடமொழி நூல் எழுந்த காலம் (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு) ஞானசாத்திரம் வடமொழியிலிருந்தால்தான் பெருமை, தமிழில் இருக்கிறது என்றால் பெருமையில்லை, வடமொழி வேதத்தில், ஆகமத்தில், புராணத்தில் காணப்பட்டது என்றால்தான் எக்கருத்துக்கும் நூலுக்கும் மதிப்பிருந்தது என்பர். இது பொதுவான உண்மையே; ஆனால் சிறப்பாக,

சிவாக்கிரயோகிகள் இவ்வளவு காலம் பிற்பட்டு இப்படி யொரு மொழி பெயர்ப்பைச் செய்வதற்கு இக்காரணம் போதுமானதாயில்லை.

ஆராய்ந்து பார்க்கும்போது, சிறப்பான வேறு காரண மும் புலப்படுகிறது. அதுவே மெய்கண்டார், சிவாக்கிர யோகி ஆகிய இருவருடைய பரம்பரைகளின் வரலாறுகள். திருக்கயிலாய பரம்பரையில் வந்த மெய்கண்டார்தாமே தமிழில் நூல் செய்தார். அவர் மாணுக்கர்கள் தமிழில் நூல் செய்தார்கள். இவை பின் வந்தோருக்குச் சாத்திரங் களாயின. வேதம், ஆகமம் என்று சொல்வனயாவும் இப் பரம்பரையினருக்குப் பொதுவகையில் சாத்திரங்களாயின. சிறப்பு வகையால் அல்ல; சிறப்பு வகையில் உள்ளன, சிவஞானபோதம், சித்தி, உண்மைவிளக்கம், இருபாஇருபது பண்டைய உந்தி, களிறு முதலியனவே. இவையாவும் திருக் கயிலாய பரம்பரை சனற்குமார சந்தானம், அல்லது மெய் கண்ட சந்தானத்துக்குரிய சாத்திரங்கள்.

ஆனல் சூரியனர் கோயிலாதீனம் வேறு. அந்த ஆதீனத்தை ஸ்தாபித்தவர் சிவாக்கிரயோகிகள். அவர் உபதேசம் பெற்ற வரலாற்றுமுறை வேறு. ஸ்ரீகண்ட பரம சிவனிடத்தில் உபதேசம் பெற்றவர் ஸ்கந்தசாமி; அவரிடம் வாமதேவமகரிஷி. அவர்தாம்பெற்ற பிரணவார்த்தத்தையும் சர்வஞானேத்தர ஆகமத்தையும் நீலகண்ட சிவாசாரியருக்கு உபதேசித்தனர். பின்னர் முறையாக விசுவேசுரர், சதா சிவர், சிவமார்க்கப் பிரகாசர் என்ற சிவாசாரியர் பரம்பரை யாக உபதேசம் பெற்றூர்கள். சிவாக்கிரயோகி என்னும் சிவக்கொழுந்து சிவாசாரியார், தம்முடைய பரந்த படிப்பும் ஞானமும் பற்றி இவர் யோகிகள் என்று சொல்லப் பெறு வார். இந்த மரபினர், ஸ்கந்த பரம்பரை, வாமதேவ சந்தானம் சதாசிவசந்தானம் என்றும் வழங்கப் பெறுவர். இவர்களில் சிவாக்கிரயோகியே சூரியனர் கோயிலில் தம் ஆதீனத்தை நிறுவினர் திருவீழிமிழலையில் இவர் பிறந் தவர். அதனல், வீழிச் சிவாக்கிரயோகி என்றும் இவர்

SAIVA SIDDHANTHA MAHA SAMAJAM, MADRAS.

LIST OF LIFE MEMBERS—(Contd.)

2167 K. C. Nagalinga Mudaliar,
101, Big Street,
Triplicane,
Madras-5

4567 C. N. Singaravelu Mudaliar,
1/1, Appakannu Mudali Street,
Royapettah,
Madras-14

4793 N. Mahalingam, M.L.A.,
2/A, Greenways Road,
Madras-28

4499 Vazhibattarasi -
Jayalakshmi Ammal,
Thirugnanasambandar Matam,
Thiru Arasili, Kozhinthiapattu,
(via) Dindivanam,
S. A. Dt.

4579 M. Asuvathama Reddiar,
Landlord,
Mananthavizhnthaputhur,
Ooraiyur P. O.,
(via) Panrutti,
S. A. Dt.

3896 M. Ramanujam Pillay,
38, East Street,
Thirukkovalur,
S. A. Dt.

2344 M. Arunachalam Pillai,
Gandhi Vidyalayam,
Thiruchirtambalam,
(via) Kuthalam,
Tanjore Dt.

4497 Meenakshi Nallakrishnan,
41, Hakim Ajmal Khan Street,
Thallakulam Post,
Madurai.

4498 RM. Annapurani Achi,
Mahibalanpatti,
Ramnad Dt.

457 K. Sadasiva Mudaliar,
39, Pillayar Koil Street,
Kasba Vellore,
N. A. Dt.

4815 R. Gunaseelan,
151, Bazaar Street,
Dharmapuri - 2,
Salem Dt.

4183 M. S. Palaniyappa Mudaliar,
125, Raja Street,
Coimbatore

4775 P. K. Natarajan,
25, Periyaswamy Street,
R. S. Puram,
Coimbatore

4787 C. P. Natarajan, B.Com., F.C.A.,
S/o M. S. Palaniyappa Mudaliar,
189, Raja Street,
Coimbatore

4706 A. Senapathi Gounder, M.L.A.,
Dharapuram,
Coimbatore Dt.

4821 G. Varadarajan,
Secretary,
Central Co-operative Bank,
Trichy.

4500 M. A. Baskaran,
Professor, French College,
Pondichery - 1

சொல்லப் பெறுவர். இவருடைய காலம் 16-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி; இவர் செய்த சைவ சந்நியாசப் பத்ததியின் காலம் சக ஆண்டு 1488 (கி. பி. 1564) என அந்நூலுள் கூறப்பட்டுள்ளது.

சிவாக்கிரயோகிகள் பேரறிஞர், பேராசிரியர், பெருஞானி: அவர் கல்வியின் பெருமை கடல்போல் விரிந்த தென்று அவர் செய்த வடமொழி, தென்மொழி நூல்களாலும், உரைகளாலும் அறிகிறோம். அவர் செய்த பாஷ்யத்தை நன்கு கற்ற பின்னரே சிவஞான சுவாமிகள் 18-ஆம் நூற்றாண்டில் தமிழ்ச் சிவஞான போத மாபாடியம் செய்தார் என்றும் நாம் அறிகின்றோம்.

இவ்விடத்துச் சில நிலைமைகளை நாம் நன்குணர வேண்டும். முதலாவது, சிவாக்கிரயோகி, மெய்கண்டார் பரம்பரையில் வரவில்லை. அவர் வந்தது ஸ்கந்த பரம்பரை. அவருக்கு மூலசாத்திரங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் அல்ல; வேறு. மெய்கண்ட சாத்திரங்களை இவர் தொடா விட்டால் குற்றமில்லை. ஆனால் இவர் மிகவும் விரிந்த மனப்பான்மை உள்ளவர். மிகச் சிறந்த சைவ சித்தாந்தி. மெய்கண்டாரின் சிவஞான போதம் மட்டுமல்ல, சிவஞான சித்தியாரையும் கற்றார். இவற்றில் மிகவும் ஈடுபட்டார். உண்மையே நாடியவரானமையால், இவற்றையும் தம் ஞான சாத்திரமாக்கிக் கொண்டார். சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் இரண்டுக்கும் பேருரை தமிழில் எழுதினர். (இவர் உரை மணிப்பிரவாளம்; பரபக்க உரை இதுவரை கிடைத்திலது.)

இனி சிவாக்கிரயோகியின் மூலக்கிரந்தங்கள் யாவும் வடமொழி. தேவிகாலோத்தரம், சர்வஞானோத்தரம் என்பன இரண்டிற்கும் இவர் தமிழுரை எழுதினர் என்று அறிகிறோம். (இவ்வுரைகள் இன்றுகிடைத்தில). தமிழராய்ப் பிறந்த யோகிகள் தமக்குத் தமிழ் மூலநூல் இல்லாமையால், வேறு சந்தானத்துக்குரிய நூல்களைத் தம் நூலாகவே கொண்டார்.

இனி, எவ்வாற்றாலும் சைவ சித்தாந்தத்துக்கே ஏற்றம் கூறவேண்டும் என்பது இவர் கருத்து. ஆகவே, பெரியவாச் சான்பிள்ளை முதலியோர் தம் சமயகிரந்தங்களுக்கும் பிரபந்தங்களுக்கும் வடமொழி பெரிதும் கலந்த மணிப் பிரவாளத்தில் வியாக்கியானம் எழுதியிருந்ததை இவர் கண்டபோது, சைவ மார்க்கத்திலும் இப்படி ஒரு வியாக் கியானம் இருந்தால்தான் சைவத்துக்குப் பெருமை என் றெண்ணினர். ஆகவே சித்தியாருக்கு மணிப்பிரவாள உரை எழுதினர் என்று நாம் யூகிக்கலாம். தம்மை வழி பட்ட சுவாநந்த நாச்சியார் என்ற ஒரு பெண்ணுக்காக 215 விருத்தங்களால் சிவநெறிப்பிரகாசம் என்ற அருமை யான தமிழ்ச் சைவ சாத்திரம் செய்யும் போாற்றல் வாய்ந்த இவ்வாசிரியர், மணிப்பிரவாளவுரை எழுதுவதற்கு வேறு காரணமில்லை. சூழ்நிலையும் காலநிலையும் அவ்வாறிருந்தன.

இதுமட்டுமல்ல, இன்னும் ஒருபடி மேலேயும் சென் றிருக்கிறார். வடமொழியிலேயே நூல் செய்து இதுவே மூலநூல் என்று சொல்லிவிட்டால் சைவசித்தாந்தத்துக்குப் பெருமையாயிருக்கும் என்றெண்ணினர்போலும். இயல் பாகவே மெய்கண்டார் நூல் மிகவும் சிறப்புடையதாயும் மிகவும் சுருக்கமாயும் இருந்ததினாலும், எல்லா விரிவான பாஷ்யத்துக்கும் இது இடம் கொடுக்குமாதலினாலும், புதிதாய் மூல சாத்திரம் செய்யும் கஷ்டம் வேண்டாம், மெய்கண்டாரின் பன்னிரு சூத்திரங்களையே வடமொழியில் பெயர்த்து எழுதிவிட்டால் போதும் என்றே இவர் எண்ணி விட்டார்போலும். எண்ணி அவ்வாறே செய்தார், செய்து கடைசிச் சூத்திரத்தில், "முக்தியின் பொருட்டு, சத்துக் களையடைந்து அவர்களுடைய வேடத்தையும் சிவாலயத்தை யும் பஜிக்கவேண்டும். சிவஞானபோத சாத்திரத்தின் சைவார்த்தத்தின் நிர்ணயத்தினை இவ்வாறு அறியவேண் டும்" என்று பொருள்படுகிற வடமொழிச் சூத்திரத்தையும் சொல்லி முடித்தார். பின் இப்பன்னிரு வடமொழிச் சூத்திரங்களும் ரௌரவாகமம் பாசவிமோசனப் படலத்தில் சொல்லப்பட்டுள்ளன என்ற கதையையும் எழுதிவிட்டார்.

இங்குநாம் நுணுகி அறியவேண்டியது,யோகியாருக்குச் சைவசித்தாந்த மூலக் கிரந்தம் வடமொழியில் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் பரபக்ஷம் செய்வதற்குப் பிற மதத்தினரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பதில் இருந்த ஒரே ஆத்திரமும் பேராவலும். அவருடைய எண்ணம் பூரணமாய் வெற்றிபெற்றது. இன்றுவரை தோன்றிய எல்லா உரைகாரர்களும் ஆராய்ச்சியாளர்களும் கூட, அவர் செய்துவைத்ததை அப்படியே ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

மிகச் சிறந்த தமிழ் பாஷ்யக்காரரான சிவஞான சுவாமிகள் முதல் இன்று சைவசித்தாந்தத்துக்குச் சம்பந்தமே இல்லாத சரித்திர ஆராய்ச்சிக்காரராய் உள்ள நீலகண்ட சாஸ்திரியார் வரையில், மெய்கண்டார், ரௌரவாகமம், பாசவிமோசனப் படலத்தில் உள்ள பன்னிரண்டு வடமொழிப் பாட்டுக்களையே தமிழில் மொழிபெயர்த்தார் என்று தீவிரமாகச் சாதித்திருக்கிறார்கள் சிவாக்கிரயோகிகளுடைய எண்ணம் எவ்வளவு அபாரமான வெற்றியடைந்திருக்கிறது என்பதையே இது காட்டும்.

சிவாக்கிரயோகி தமிழினிடத்திலே மிகுந்த அன்பும் பற்றும் அதில் பேரார்வமும் உடையவர். சித்தியாரில் உள்ள மெய்கண்டார் வணக்கப் பாடலுக்குப் பின்வருமாறு உரை எழுதியிருக்கிறார். "மேகம் பொருந்துஞ் சோலை சூழ்ந்துள்ள திருவெண்ணெய் நல்லூரிலே திருவவதாரஞ் செய்து ஒன்றுக்கும் பற்றாத என்னை எழுபிறப்பாகிய கடலில் அழுந்தாவகை தனது ஞானமாகிய கையினாலே எடுத்து, சந்ததமும் தன்னை என்னிதயத்திலே சிந்திக்க வைத்துக் கிருபையினாலே தம்முடைய ஸ்ரீபாதங்களை என்னுடைய புன்தலைமேல் வைத்தருளும் மெய்கண்ட தேவ நாயனார் அருளிச் செய்த சிவஞானபோதம் என்னும் சாஸ்திரத்தைச் சிரசாக வகித்துக்கொண்டு சைவத்தில் திரிபதார்த்த சதுஷ் பாதங்களையும், சொல்லாநின்றேன். யாம்—எழுவாய்; தரிக்கலுற்றும்—பயனிலை."

இவ்வளவு அழகாகத் தமிழ் வியாக்கியானம் எழுதும் ஆற்றல் படைத்த சிவாக்கிரயோகி இந்த ரௌரவாகமக் கதையைச் சிருஷ்டிப்பானேன், வடமொழிச் சிவஞான போதம் எழுதுவானேன், மணிப்பிரவாள வியாக்கியானம் எழுதுவானேன் என்ற கேள்வி கேட்கத் தோன்றும். வேறொன்றுமில்லை. தமிழினிடத்திலும், சிறப்பாக சைவசித்தாந்தத்தினிடத்திலும், அவருக்கிருந்த ஆழ்ந்த பற்றுதலே அவரை இவ்வாறு செய்யச் செய்தது. வட மொழியில் மூலநூல் இருந்தால்தான் சைவ சித்தாந்தம் அரியணை ஏறும் என்று உண்மையாக நம்பினார். அதற் காகவே உழைத்து இவ்வேலை செய்தார். இதன் பொருட்டு அவரை நாம் போற்ற வேண்டும்.

அவர்வாழ்ந்து நூல்செய்தது 1564-இல் என்று திட்ட மாகத் தெரிகிறது. 400 ஆண்டுகள் முடிந்திருக்கின்றன. அவர் நினைவுக்கு நாம் அஞ்சலி செய்யவேண்டும்.

திரு. இராவ்சாகிப்

நல். முருகேச முதலியார் B. A. அறுபதாம் ஆண்டு விழா

(கொ. நீ. சிங்காரவேலு)

1. சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சிறந்த தலைவர்களில் திரு நல். முருகேச முதலியார் ஒருவராவர். அன்னாரின் மணிவிழா 19-4-65 அன்று அவர் இல்லத்தில் சிறப்பாக நடந்தது. பல்வேறு துறைகளிலுள்ள பெரியோர்கள் அவ்விழாவிற்கு வருகை தந்தனர். சமாஜத் தின் சார்பில் சமாஜத் தலைவரும் செயலாளரும் விழாத் தலைவருக்கும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியாருக்கும் மாலைகள் அணிவித்து சமாஜத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

2. திரு நல். முருகேச முதலியார் அவர்கள் இளமை தொட்டே சிவபக்தி உடையவர். அரசாங்கத் தலைமை

அலுவலகத்தில் அலுவல் புரியும்போதும் வழிபாட்டை மறந்தவரல்லர். அலுவலகத்தில் காலையில் பணிதொடங்கும்போதும், மாலையில் முடித்து வீடு திரும்பும்போதும் தமக்குள்ளே சிலதோத்திரங்களைச்சொல்லிக் கொள்ளுதலை நியமமாகக் கொண்டிருந்தார். இது அலுவலகத்தில் இருந்தவர்களுக்கு வியப்பைத் தந்தது. சில நாட்களில் அவர் வீடு திரும்ப இரவு 9 அல்லது 10 மணிகூட ஆவதுண்டு. ஆனால் எக்காலத்திலும்திருவல்லிக்கேணி அரசடிக் கற்பக விநாயகர் கோவிலை வலம்வராமல் வீடு திரும்பியதில்லை. தாம் இப்போது வசிக்கும் இல்லத்திற்கு 'அரசடி கற்பகம்' என்று பெயர் வைத்ததில் வியப்பொன்றுமில்லை.

3. திரு முதலியார் அவர்கள் உழைப்பால் உயர்ந்தவர். அரசாங்கச்செயலகத்தில் அவர் உண்மை உழைப்பிற்கும் திறமைக்கும் எடுத்துக்காட்டாக இருந்தார். எடுத்த 'வினைக்கண் துளங்காது தூக்கங்கடிந்து' செய்வதில் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. அவருடைய உழைப்பை அந்நாளைய ஆட்சியாளர் உணர்ந்து ராவ்சாகிப்' என்ற பட்டம் வழங்கினர். சுதந்திரம் வந்த பின் பல ஆண்டுகள் அரசாங்கத் துணைச் செயலாளராகப் பணிபுரிந்து அமைச்சர்களுக்கு நிர்வாகத்தில் பேருதவியாகயிருந்து ஓய்வு பெற்றார்.

4. ஓய்வுபெற்ற பின்னும் திரு. முதலியார் அவர்களை அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டது. மீன் துறையில் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்ந்தெடுப்புக் குழுவின் தலைவராகவும் சில ஆண்டுகள் பணிபுரிந்தார்.

5. திரு. முதலியார் அவர்கள் ஆங்கிலத்தில் நல்ல எழுத்தாளர். அவருடைய கட்டுரைகளைப் பிரசுரிக்காத ஆங்கில நாளிதழ்களே சென்னையில் இல்லை. இவ்விதழ்கள் அவருடைய கட்டுரைகளுக்குத் தங்கள் தலையங்கங்களின் அருகில் இடம் கொடுத்துப் பெருமையடைகின்றன. கட்டுரைகளில் அவர் எடுத்தாளாத பொருள்களே இல்லையெனலாம். அரசியல், நிர்வாகம், கலை, சிற்பம், சமயம் முதலிய பல துறைகளைப் பற்றிய கட்டுரைகள் எழுதியுள்ளார். அக்கட்டுரைகளில் பொருட் செறிவும் - சொல் நயமும் விளங்கும்.

6. அவர் திருக்குறளை ஆழ்ந்தாராய்ந்து, கற்றுள்ளார். இவ்வாண்டு ஜனவரிமாதத்தில் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் ''திருக்குறளில் அரசியல்'' என்னும் பொருள்பற்றி மூன்று நாட்கள் திருமதி சொர்ணம்பாள் அறக்கட்டளைச்சொற்பொழிவுகள் இவர்களால் நிகழ்த்தப் பெற்றன,

7. திரு. முதலியார் அவர்கள் சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த புலமையுடையவர். அவர் ஸ்ரீமத் அருள் நந்திசிவா சாரிய சுவாமிகள் அறக்கட்டளையின்கீழ் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பெற்று அலகபாத், காசிப் பல்கலைக் கழகங்களில் 1963-ல் சைவ சித்தாந்த விரிவுரைகள் ஆற்றியுள்ளார். 1953-54, 1958-59 ஆண்டுகளில் சமாஜத்தலைவராகவும் 1962-ல் சமாஜ ஆண்டுவிழாத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இப்போது சமாஜத் துணைத்தலைவராகப் பணியாற்றிவருகிறார்.

8. திரு முதலியார் அவர்களை, சைவ சித்தாந்த மகா சமாஜம் தொடங்கயிருக்கும் "சைவ சித்தாந்தம்" என்னும் ஆங்கில முத்திங்களிதழுக்கு ஆசிரியராகத் தேர்ந்தெடுத்திருப்பது எவ்வளவு பொருத்தம் என்பது கூருமலே விளங்கும். அன்னாரின் கண்காணிப்பில் இவ்வாங்கில இதழ் வெற்றிகரமாக நடக்கும் என்பதில் ஐயமில்லை.

9. அன்னார் எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என சமாஜச் சார்பில் இறைவனை வழுத்துகின்றேன்.

சமாஜத் தீர்மானங்கள்

25-4-65 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சைவசித்தாந்த மகாசமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டத்தில் பின்குறித்த தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றன:—

1. 1963 டிசம்பரில் புதுவை மாநாட்டிற்காகச் செய்யப்பெற்ற அதிகச் செலவு ரூ. 469-59ஐ இப்பொதுக் குழு அங்கீகரிக்கிறது.

2. இச்சைவசித்தாந்த மகாசமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் சமாஜச்சார்பில் "சைவசித்தாந்தம்"

என்ற பெயரில் முத்திங்கள் ஆங்கில இதழ் தொடங்குவது என்று சமாஜச் செயற்குழு 31-1-65 அன்றைய தீர்மானத்தை உறுதிப்படுத்துகிறது.

மேலும் இப் பொதுக் குழுக்கூட்டம், சமாஜத்தின் புதிய அமைப்பையும் விதிகளையும் பின் குறித்தபடி திருத்தத் தீர்மானிக்கிறது.

மேற்குறித்த அமைப்பு விதிகளில்—

(i) அதிகரணம் க விதி 3 (iii) ல்

''சித்தாந்தம்'' என்னும் திங்கள் நாள் நடத்தல்' என்ற சொற்களுக்குப்பின் 'சைவசித்தாந்தம்'' என்னும் ஆங்கிலத் தாள் நடத்தல்' என்ற சொற்களைச் சேர்த்துக்கொள்ளவும்

(ii) அதிகரணம் ச விதி 29ல் காணும் குறிப்பில் பின்வரும் வாக்கியத்தைச் சேர்த்துக்கொள்ளவும்.

''சைவசித்தாந்தம்'' என்னும் ஆங்கில இதழின் கணக்குகளையும் தனியாக வைத்தல் வேண்டும்'

(iii) அதிகரணம் கூ-ல் 51-ஆம் விதியின்கீழ் பின் குறித்த விதியைச் சேர்த்துக்கொள்ளவும்:—

''51-அ ''சைவசித்தாந்தம்'' என்னும் ஆங்கிலப்பத்திரிகையின் நிர்வாகத்தை நிர்வாக சபை அப்போதைக்கப்போது தீர்மானிக்கும்'

3. ஆங்கிலப்பத்திரிகைக்கு வசூலாகும் பணத்தை இராயப்பேட்டை கிளை இந்தியன்பாங்கில் சமாஜத்தின் பேரில் தனிக் கணக்காக வைத்துக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

அதிலிருந்து சமாஜச் செயலாளருக்கும் பொருளாளருக்கும் பணம் வாங்க அதிகாரம் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

4. சமாஜப்பதிப்பாக சமாஜ அனுமதி பெற்று தனியார்கள் வெளியிடும் நூல்களில் பத்து சதவிகிதம் சமாஜத்துக்கு நன்கொடையாக அளிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. செயலாளர்,

பிறசெய்திகள்

கிழக்குத்தாம்பரம் ஸ்ரீ கற்பகவிநாயகர் பக்த ஜனசபையில் 28-3-65 அன்று திரு. M. S. துரைசாமிபிள்ளை அவர்கள் "காரைக்கால்அம்மையார்"பற்றி விரிவுரையாற்றினர்கள்.

மேற்குறித்த சபை ஆதரவில் கந்தபுராண விரிவுரை நிறைவுவிழா 3-5-65 அன்று நிகழ்ந்தது. திரு. L. S. நீலகண்ட ஐயர், திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், திரு. B. S. இராமச்சந்திர ஐயர் முதலியோர், சொற்பொழிவாளராய திரு. சுப்பிரமணிய ஐயர் அவர்களைப் பாராட்டிப் பேசினர். திரு.க. வடிவேலாயுதம் அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

புரசைத்திருநெறிக்கழக 50 ஆம் திங்கள் வழிபாடு 18-4-65 ல் திருமயிலை ஸ்ரீ வெள்ளீச்சுரர் ஆலயத்தில் நிகழ்ந்தது.

நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியாசாலையின் 39 ஆவது ஆண்டுவிழா 26-4-65 அன்று திருச்சி திரு. ஐயன்பெருமாள் கோனர் அவர்கள் தலைமையில் சிறப்புறநடைபெற்றது.

குருகுலம் அழகரடிகள் மணிவிழா 2-5-65 அன்று பாலர் அரங்கில் காலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையிலும் மாலையில் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் M.A M.L,C தலைமையிலும்நிகழ்ந்தது. பல திருக்கோயில்கள், ஆதீனங்கள், சபைகள் சார்பில் வாழ்த்துக்களும் வரிசைகளும் பாராட்டுக்களும் வழங்கப்பெற்றன. மணிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்பெற்றது. மணிவிழாக்கண்ட பெரியார் அருள்திரு அழகரடிகள் செந்தமிழும் சித்தாந்த சைவமுமே தமமுயிர்எனக் கொண்டொழுகுபவர். அவர்கள் பன்னலங்களும் திகழப்பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து நம் மொழி, சமய ஆக்கப்பணிகள் பல செய்ய எல்லாம் வல்ல இறையருள் அவர்களுக்கு எல்லா வசதிகளையும் இனிதுட்ட அருள் சுரக்க அவனருளையே வழுத்தி வணங்குகின்றோம்.

கும்பகோணம் சிவபூசாதுரந்தரர் சைவத் திருவாளர் கொ. சொ. பொ. கோடிலிங்கம் செட்டியார் அவர்கள் 4-2-65 ல் இறைவன் இன்னடி நீழலை எய்தியது அறிந்து சமாஜ அன்பர்களுக்கும் அச்செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அப்பெரியார் குடந்தையில் நம் சைவ சித்தாந்தம் மேலோங்கப் பல்லறங்களையும் வழுவாது செய்த உத்தமர். இறைவன் இன்கழல் சிந்தை செய்தே மரணவாதனை யற்று அவனடியிணைகளை அடைந்தார். அருமைமிகு ஞானத்தந்தையினையிழந்த திரு. K.S.P.K. குஞ்சிதபாதஞ் செட்டியார் அவர்களுக்கு ஆறுதல் கூறுவதுடன் இறந்த அப்பெரியார் ஆன்மா இறைவனின் குஞ்சித பாதத்தின் அருளுக்குப் பாத்திரமாகி இன்புற்றிருக்க அப்பெரு மானையே இறைஞ்சுகிறோம்.

உலகத்தில் தற்காலத்தில் ஆற்ற வேண்டிய மிகவும் அத்தியாவசியமான தொண்டுகளில் மனிதனை மனிதனுக உணரவைத்து வாழவைப்பது பணியேயாகும். அதனை வடார்க்காடு மாவட்டத்தில் வாலாஜா பேட்டையில் ஏகாம் பரநாதர் ஆலயத்தில் அறுபத்துமூவர் திருநட்சத்திரக் குழு வினர் நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து பெரியபுராணத் தின் அடியொற்றி ஆற்றிவருவது போற்றத்தக்கது.

கோவூர் சுந்தரேசுவரர் ஆலயத்தில் திருவிளையாடற் புராணவிரிவுரை புலவர் புண்ணிய கோடி அவர்களால் சிறப் புறநடத்தப்பெற்று வருகின்றது. இதன் தொடக்கவிழாவின் போது பெரியபுராண விரிவுரை முடிவு விழாவும் பன்னிரு திருமுறை விழாவும் நடந்தன. தருமபுர ஆதீன சமயப்பிர சார நிலையத்தலைவர் அருள் திரு சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் பொன்னாடை போர்த்தித் தங்கப்பதக்கமும் அளித்து திரு. புண்ணியகோடி அவர்களுக்குச் சிறப்புச் செய்தார்கள்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.